www.Padasalai.Net www.CBSEtips.in

V8M

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

# வகுப்பு 8

காலம்: 2.30 மணி **கணிதம்** மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **9×1=9**

1) $\frac{3}{4}\times\left(\frac{5}{8}\div\frac{1}{2}\right)=$ a) $5/8$ b) $2/3$ c) $15/32$ d) $15/16$

2) $\frac{10^x}{10^{-3}}=10^9$ எனில் x ஆனது ________ ஆகும்.
a) 4 b) 5 c) 6 d) 7

3) 24 செ.மீ விட்ட அளவுள்ள வட்டத்தின் ஆரம் ________.
a) 6 செ.மீ b) 12 செ.மீ c) 48 செ.மீ d) 8 செ.மீ

4) செவ்வகத்தின் பரப்பு $48m^2n^3$ ச.அ அதன் நீளம் $8mn^2$ அலகுகள் எனில், அதன் அகலம் ________ அலகுகள்.
a) 6mn b) $8m^2n$ c) $7m^2n^2$ d) $6m^2n^2$

5) $x^2-5x+6$ ன் காரணிகள் $(x-2)(x-p)$ எனில் p ன் மதிப்பு ________ ஆகும்.
a) −3 b) 3 c) 2 d) −2

6) ஓர் எண்ணின் 60% லிருந்து 60 ஐக் கழித்தால் 60 கிடைக்கும் எனில் அந்த எண் ________ ஆகும்.
a) 60 b) 100 c) 150 d) 200

7) ஓர் அசலின் மீதான வட்டி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டால், ஓராண்டிற்கு ________ மாற்றுக் காலங்கள் இருக்கும்.
a) 2 b) 4 c) 6 d) 12

8) 12 செ.மீ மற்றும் 16 செ.மீ பக்க அளவுள்ள ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம் ________ ஆகும்.
a) 28 செ.மீ b) 20 செ.மீ c) 24 செ.மீ d) 21 செ.மீ

9) பதினோறாவது பிபனோசி எண் என்ன?
a) 55 b) 77 c) 89 d) 144

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **5×1=5**

10) $\frac{15}{-4}$ என்ற விகிதமுறு எண்ணின் தசம வடிவம் ________ ஆகும்.

11) இரண்டிற்கும் மேற்பட்ட விளிம்புகள் சந்திக்கும் புள்ளி ________ ஆகும்.

12) x+5 = 12 என்ற சமன்பாட்டில் x ன் மதிப்பு ________ ஆகும்.

13) ஒரு பழ வியாபாரி ₹200க்கு பழங்களை விற்று ₹40 ஐ லாபமாகப் பெறுகிறார். அவரின் இலாபச் சதவீதம் ________ ஆகும்.

14) மூன்று நாணயங்களை ஒரே சமயத்தில் சுண்டும்போது கிடைக்கும் விளைவுகள் ________ ஆகும்.

**III. சரியா? தவறா? எனக் காண்க:** **5×1=5**

15) $a^0 = 1$ என்பது அனைத்து a ன் மதிப்புகளுக்கும் பொருந்தும்.

16) ஒரு வட்டத்தின் மீதுள்ள ஏதேனும் இரண்டு புள்ளிகளை இணைக்கும் கோடு விட்டம் ஆகும்.

17) ஆதிப்புள்ளியின் ஆய அச்சுத் தொலைவுகள் (1, 1) ஆகும்.

18) தூரமும் - நேரமும் நேர்மாறல் ஆகும்.

19) பிபனோசி எண்தொடரில் ஒவ்வொரு மூன்றாவது உறுப்பும் 2ன் மடங்கு ஆகும்.

**IV. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** **10×2=20**

20) கூடுதல் காண்க $\frac{7}{5}+\frac{5}{7}$.

21) 108 ஆனது ஒரு முழுவர்க்க எண்ணாகுமா?

22) மதிப்பு காண்க: $\left(\frac{-5}{6}\right)^{-3}$

23) வட்டக்கோணப் பகுதியின் ஆரம் 16 செ.மீ. மையக்கோணம் $45^\circ$ எனில் அதன் வில்லின் நீளம் காண்க.

24) பெருக்கற்பலன் காண்க $(2x+3)(2x-4)$.

25) விரிவாக்குக: $(y-5)^3$

26) x ன் மதிப்பு காண்க: $\frac{2x}{3}-4=\frac{10}{3}$

27) ஓர் எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

28) ஒரு பொருளை ₹ 820க்கு விற்பதனால் விற்கும் விலையில் 10% அளவு நட்டம் ஏற்படுகிறது எனில், அந்தப் பொருளின் அடக்கவிலையைக் காண்க.

29) இருசக்கர வாகனம் ஒன்றின் விலை 2 ஆண்டுகளுக்கு முன் ₹ 70,000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 4% வீதம் குறைகிறது. அதன் தற்போதைய மதிப்பைக் காண்க.

30) ஒரு தேர்வில் வழங்கப்பட்ட வினாத்தாளில் ஒவ்வொரு பிரிவிலும் 5 வினாக்கள் வீதம் 3 பிரிவில் உள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டுமெனில் அவர்களுக்கு எத்தனை விதமான வழிகள் உள்ளது?

31) தொடர் கழித்தல் முறையில் 36 மற்றும் 80ன் மீப்பெரு பொதுக்காரணியைக் காண்க.

**V. ஏதேனும் 9 வினாக்களுக்கு விடையளி:** **9×5=45**

32) இறங்கு வரிசையில் எழுதுக: $\frac{-5}{12}, \frac{-11}{8}, \frac{-15}{24}, \frac{-7}{-9}, \frac{12}{36}$

33) மதிப்பு காண்க: $\left(\frac{4}{3}-\left(\frac{-3}{2}\right)\right)+\left(\frac{-5}{3}\div\frac{30}{12}\right)+\left(\frac{-12}{9}\times\frac{-27}{16}\right)$

34) விகிதமுறு எண்களுக்கான $a\times(b+c) = (a\times b)+(a\times c)$ என்ற பங்கீட்டு பண்பினை $a=\frac{-1}{2}$, $b=\frac{2}{3}$ மற்றும் $c=\frac{-5}{6}$ ஆகிய விகிதமுறு எண்களுக்கு சரிபார்க்கவும்.

35) ஓர் ஏவுகணையின் படமானது படத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அளவுகளைக் கொண்டுள்ளது. அதன் பரப்பளவைக் காண்க.




36) (i) விரிவாக்குக: $(x+4)^3$ (ii) $(103)^3$ன் மதிப்பு காண்க.

37) காரணிப்படுத்துக $3x^3-45x^2y+225xy^2-375y^3$.

38) 210 ஆண்கள் நாளொன்றுக்கு 12 மணிநேரம் வேலை செய்து ஒரு வேலையை 18 நாள்களில் முடிப்பர். அதே வேலையை நாளொன்றுக்கு 14 மணிநேரம் வேலை செய்து 20 நாள்களில் முடிக்க எத்தனை ஆண்கள் தேவை?

39) ஓர் அசலானது 2 ஆண்டுகளில் ஆண்டுக்கு 4% கூட்டுவட்டியில் ₹ 2,028 ஆக ஆகிறது எனில் அசலைக் காண்க.

40) ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் மற்றும் மாணவிகள் விகிதம் 5:3 ஆகும். ஒரு தேர்வில் 16% மாணவர்களும் 8% மாணவிகளும் தேர்ச்சி பெறவில்லை எனில் தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவிகளின் சதவீதத்தைக் காண்க.

41) பள்ளி மாணவர்களுக்கான நான்கு இலக்க வரிசை எண்ணில் முதல் இலக்கம் A, B, C, D மற்றும் E என்ற ஐந்து எழுத்துக்களில் ஏதாவது ஒரு ஆங்கில எழுத்தினைக் கொண்டும் அதனைத் தொடர்ந்து வரும் மூன்று இலக்கங்கள் ஒவ்வொன்றும் 0 முதல் 9 வரையிலான 10 எண்களை கொண்டும் அமைந்துள்ளது எனில் வரிசை எண் அமைப்பதற்கு எத்தனை விதமான வழிகள் உள்ளது? (A000, B000, C000, D000 மற்றும் E000 தவிர)

42) 320, 120 மற்றும் 95 தொடர் கழித்தல் முறையில் சரிபார்க்க.




**VI. இரண்டு வினாக்களுக்கு விடையளி:** **2×8=16**

43) AB = 5 செ.மீ, BC = 4.5 செ.மீ, CD = 3.8 செ.மீ, DA = 4.4 செ.மீ மற்றும் AC = 6.2 செ.மீ. அளவுகள் கொண்ட நாற்கரம் வரைந்து ABCD அதன் பரப்பு காண்க.

**(அல்லது)**

BI = 6.5 செ.மீ, IR = 5 செ.மீ மற்றும் ∠BIR = 70° அளவுகளைக் கொண்ட BIRD என்ற இணைகரம் வரைந்து அதன் பரப்பு காண்க.

44) கீழ்காணும் புள்ளிகளை வரைபடத்தாளில் குறிக்கவும்.
A(5, 2), B(−7, −3), C(−2, 4), D(−1, −1), E(0, −5), F(2, 0), G(7, −4), H(−4, 0).

**(அல்லது)**

$y = 2x+5$ என்ற சமன்பாட்டிற்கு வரைபடம் வரைக.

----------